மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 167, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

167—

மாநில மகளிர் ஆணையம்

***23036—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மகளிர் ஆணையத்தைத் தன்னாட்சி அமைப்பாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்குச் சட்டப்பூர்வமான அதிகாரம் அளிப்பதற்கான பணிகள் தொடங்கிவிட்டன. முதற்கட்டமாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையைப் பெற்று சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலே 22-4-2008 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தாமதமாக வந்தாலும், நிதிநிலை அறிக்கையிலேயே தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்து, மகளிர் ஆணையத்திற்கான தன்னாட்சி அந்தஸ்தை உருவாக்குவதற்கான சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டிருப்பதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் இந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதில், ஆணையத்தினுடைய பரிந்துரைகளை சட்டமன்றத்தில் வைத்து, எதிர்காலத்தில் விவாதிக்கப்படுமா? அவ்வாறு விவாதிக்கப்பட்டு எடுக்கப்படும் முடிவுகளை, பெண்கள் ஆணையம் நிறைவேற்றுவதற்கான காலம், அதற்கான வரையறை நிச்சயிக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 28]

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே, இந்தச் சட்டம் விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது விரிவாக விவாதிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டமுன்வடிவில் பல்வேறு சிவில் உரிமை உள்பட வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, இந்தப் பெண்கள் ஆணையம் செயல்படுகின்றபோது, பெண்களுக்கு எதிரான வழக்குகளைப் பதிவு செய்வதற்கு, விசாரிப்பதற்கு, தனிக் காவல் பிரிவு உருவாக்கப்படுமா? உதாரணமாக, போதைப் பொருள் தடுப்புப் பிரிவு, தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, இவற்றிற்கெல்லாம், தனி ஆய்வாளர், துணை ஆய்வாளர் இருப்பதுபோல, தமிழகப் பெண்கள் ஆணையத்திற்கும் வழக்குகளை விசாரிப்பதற்காகக் காவல் பிரிவு உருவாக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் ஆணையத்திற்கென தனியாக காவல் பிரிவு ஒன்றை உருவாக்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், கடந்த ஒரு வருடமாக சமூக நலத் துறை, மகளிர் ஆணையத்தின் வாயிலாக பல மாவட்டங்களுக்குச் சென்று கருத்தரங்கங்கள், விழிப்புணர்வு முகாம்கள், குறிப்பாக காவல் துறையோடு இணைந்து நடத்திக்கொண்டு வருகின்றன. முக்கியமாக மகளிர் காவல் நிலையங்களில், பெண்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளான வரதட்சணை, குடும்ப வன்முறை போன்ற பிரச்சினைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்ற பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.